**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (கூ.பொ.) திரு பெ. நடேசன், எம்.,இ., எம்.பி.ஏ., அவர்களால் 13.02.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **11.02.2019** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

**(1)** இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் CC TV கண்காணிப்பு காமரா பொருத்தும் `. 4.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு 01.02.2019 அன்று வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. MDS Power System, கிச்சிப்பாளையம், சேலம் – 15– மதிப்பீட்டைவிட 0.01% குறைவு
2) M/s. நிரஞ்சனா கன்ஷ்ரக்சன்ஸ், காக்காவேரி அஞ்சல், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 2.85% அதிகம்.

மதிப்பீட்டினைவிட 0.01% குறைவான M/s. MDS Power System, சேலம் – 15 ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் – மதிப்பீட்டைவிட 0.01% குறைவான M/s. MDS Power System, சேலம் – 15 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ2/2129/18)

**தீர்மானம் எண். 498**

அனுமதிக்கப்பட்டது

**(2)** இராசிபுரம் நகராட்சி அண்ணாசாலை தொடக்கப் பள்ளியில் ஒரு பகுதி சிமெண்ட் அட்டை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இப்பள்ளிக் கட்டிடம் கட்டி சுமார் 42 ஆண்டுகள் முடிந்துவிட்டதாலும், கட்டிடம் பழுதடைந்துள்ளதாலும், இக்கட்டிடத்தினை இடிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், SSA திட்டத்தின்கீழ் புதிய வகுப்பறை கட்ட அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1719/18)

**தீர்மானம் எண். 499**

அனுமதிக்கப்பட்டது

**(3)** இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் 6200 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு (Internal plumbing for Water Supply HSC ) வழங்க இரண்டாம் அழைப்பாக 24.01.19 அன்று மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடப்பட்டன. அதற்கான விளம்பரக் கட்டணங்கள் வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) திநியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் | – | தமிழ்நாடு | - | `. 48750/- |
| 2) மக்கள்குரல், | – | தமிழ்நாடு | - | `. 33750/- |
| | | | | ---------- |
| | | | | `. 82500/- |
| மாநில / மத்திய சரக்கு மற்றும் சேவை வரி | | | – | `. 4125/- |
| | | | | ---------- |
| **மொத்தம்** | | | – | **`. 86625/-** |
| | | | | ---------- |

விளம்பரக் கட்டணம் `. 86625/- ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/218/18)

**தீர்மானம் எண். 500**

அனுமதிக்கப்பட்டது

( 4 ) இராசிபுரம் நகராட்சியில் இணையதளத்தில் தயார் செய்யப்பட்ட 2017–2018–ஆம் ஆண்டிற்கான பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்விநிதி கணக்குகளை தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பித்து, தணிக்கை முடிக்கப்பட்டுள்ளதால், ஆண்டு கணக்குகள் தயார் செய்து வழங்கியதற்கான தொகை `. 40000/– அக்கவுண்ட்ஸ் கன்சல்டென்ட் திரு ஜெ. கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 2017–2018–ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் தயார் செய்ததற்கான தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(பி1/2293/17)

**தீர்மானம் எண். 501**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– பெ. நடேசன்,
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.